2002 அக்டோபர் 29]

குப்பச்சிப்பாறை கிராமத்திற்கு 6 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள குருக்கனப்பள்ளி என்னும் இடத்தில் கால்நடை மருந்தகம் ஒன்று உள்ளது. ஆனாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய குப்பச்சிப்பாறை என்ற கிராமத்தில் 15 ஆயிரம் கால்நடைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்ற காரணத்தால், தற்போது கால்நடை பராமரிப்புத் துறையில் மறு சீரமைப்புப் பணி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஊராட்சி ஒன்றியத்தில் பணிபுரியும் கால்நடை விரிவாக்க அலுவலர்களைக் கால்நடை பராமரிப்புத் துறைக்கே திருப்பி அனுப்புவது பற்றிய கருத்துரு உள்ளாட்சித் துறையின் ஆய்வில் உள்ளது. மேற்படி கால்நடை விரிவாக்க அலுவலர்கள் இத்துறைக்குத் திரும்ப வந்த பிறகு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது பற்றி அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து முடிவெடுக்க உள்ளது. அவ்வாறு ஆய்வு செய்யும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குப்பச்சிப்பாறை கால்நடைக் கிளை நிலையத்தைக் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்துவது பற்றி, நிதி நிலைக்கு ஏற்றாற்போல் பரிசீலித்து, முடிவெடுக்கும் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 66, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

66—

மாணவியர் விடுதி

***20382—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொரப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2002 அக்டோபர் 29

முற்பகல் 11-15

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மொரப்பூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக மாணவியர் விடுதி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) ஏற்கெனவே பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகள் 972 செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த விடுதிகளில் 202 விடுதிகள்தான் அரசுக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தனியார் கட்டடங்களில் இயங்கும் மற்ற விடுதிகளில் மாணவ, மாணவிகள் அடிப்படை வசதிகள் இல்லாமல் மிகவும் சிரமப்படும் நிலையில் உள்ளனர். அதனால் இந்த அரசு மாணவ, மாணவிகளுடைய கல்வித் தரத்தை உயர்த்தவும் அவர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, அவர்களுடைய உணவுக் கட்டணத்தை உயர்த்தியது மேலும், அவர்கள் தங்கிப் படிக்கும் விடுதிகளில் அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யவேண்டுமென்ற காரணத்திற்காகவும் இந்த வருடம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பொறுப்பேற்ற பிறகு 114 விடுதிகளில் இப்போது வேலை முடியும் நிலையில் இருக்கிறது என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு, மேலும் 'அரசுக் கட்டடங்கள் கட்டிய பிறகு புதிய விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெ. பழனியப்பன்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த மாமன்றத்தில் நம்முடைய இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழகத்திலே வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிற அனைத்து விடுதிகளுக்கும் இன்னும் இரண்டாண்டுகளில் அரசாங்கத்தின் மூலமாகச் சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்ற ஒரு நல்ல செய்தியை இங்கே வெளியிட்டிருந்தார்கள். அதற்காகத் தமிழகத்திலே, பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிற பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிட மாணவ, மாணவியர் சார்பாக, நம்முடைய தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா

2002 அக்டோபர் 29]

அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பேசுகிறபோது, புதிதாக விடுதிகள் தொடங்குகிற எண்ணம் அரசினுடைய பரிசீலனையில் இல்லையென்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இருந்தாலும்கூட, மொரப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியானது, நம்முடைய தமிழக முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியிலே கிட்டத்தட்ட 600 மாணவர்கள்—ஏழையெளிய மாணவர்கள்—படித்துக் கொண்டிருக்கிறார்கள். புதிதாகத் தொடங்க திட்டம் இல்லையென்று சொன்னாலும்கூட—தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் அதிகமான எண்ணிக்கையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். இப்போது விடுதியிலே தங்கிப் படிப்பதற்காக விண்ணப்பித்து, காத்துக்கொண்டிருக்கிறார்கள். புதிதாகத் தொடங்கவில்லையென்று சொன்னாலும்கூட—விடுதியிலே தங்கிப் படிக்கின்ற மாணவர் எண்ணிக்கையை உயர்த்தித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக அறிவதோடு, அப்படி இரண்டாண்டுகளில் நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்ததற்கு இணங்க, அனைத்து வாடகைக் கட்டடங்களிலே இயங்கிக்கொண்டிருக்கிற விடுதிகளுக்கும் சொந்தமாகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின்பு, அதற்குப் பின்னால் புதிதாகத் தொடங்கவிருக்கிற காலத்தில் இந்தப் பள்ளிக்கு முன்னுரிமை வழங்கி புதிதாக அரசு விடுதி தொடங்க முன்வருமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூர் தொகுதியில் இதுவரை ஏழு அரசு விடுதிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்விடுதிகளுக்கு இப்போது அந்த மாவட்டத்தில் புதிதாக 5 கட்டடங்கள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கட்டடங்களைக் கட்டி முடித்த பிறகு நம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினரவர்களுடைய கோரிக்கையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அங்கே பயிலும் மாணவர்களுடைய, மாணவிகளுடைய விடுதி எண்ணிக்கையை உயர்த்த இந்த அரசு ஆவன செய்யும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.